
யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை – 2020 – தரம் 06
First Term Examination – 2020 – Grade 06

கணிதம் I, II Mathematics I, II	32	T	I, II	இரண்டு மணித்தியாலம் Two Hours
சுட்டெண் Index No				கணிதம்

பகுதி – I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. 

வட்டத்தின் மீது அமைந்துள்ள புள்ளிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

2. 'இரண்டு மில்லியன் இருபது' என்ற எண்ணை இலக்க வடிவில் எழுதுக.

3. $<$ அல்லது $>$ என்ற குறியீடுகளை மட்டும் பயன்படுத்தி வெற்றிடங்களை நிரப்புக.

   (i) 2 ..... (-8)

   (ii) (-27) ..... (-25)

4. ஏழின் வித்தியாசமான கூட்டல் பிணைப்புக்களை எழுதுக.

5.
$$\begin{array}{r} 5\ y\ 1 \\ y\ z\ 6 \\ \hline x\ 5\ x \end{array}$$
இக் கூட்டல் செய்கையில் x, y, z இனால் குறிக்கப்படும் இலக்கங்களை எழுதுக.

6. 83 ஐ கிட்டிய 10 இற்கு மட்டந்தட்டுக.

7. பெருக்குக

   129×13

8. 7, 5, 6, 2 ஆகிய இலக்கங்கள் ஒவ்வொன்றையும் ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்தி எழுதக்கூடிய மிகச்சிறிய நான்கிலக்க எண்ணை எழுதுக.

9. ஒரு புகையிரத நிலையத்தில் உள்ள 897 பயணிகளில் 541 பேர் பெண்களாக இருக்கும் அதே வேளை 27 ஆண்கள் மட்டும் குடைவைத்திருந்தனர். குடைவைத்திராத ஆண்களின் எண்ணிக்கையைக் காண்க

www.lkedu.lk


10. கடிகாரமொன்று 1மணி 20 நிமிடத்தைக் காட்டும் போது மணிமுள் நிமிடமுள் என்பவற்றுக்கிடையிலான கோணம் எவ்வகையானதாகும்

11. 240 நிமிடங்களை மணித்தியாலத்தில் தருக.

12. அரைவட்டத்திற்கு எத்தனை சமச்சீர் அச்சுக்கள் உள்ளன?

13. -5 இற்கும் 5 இற்கும் இடையிலுள்ள எல்லா இலக்கங்களையும் ஏறுவரிசையில் எழுதுக.

14. உருவில் எத்தனை கூர்ங்கோணங்கள் உள்ளன?



15. நிலைக்குத்துத்தளத்தை இனங்காணப் பயன்படுத்தும் உபகரணத்தின் பெயரினைக் குறிப்பிடுக.

16. தினேஷ் தனது பிறந்ததினத்தை 20ம் திகதி பங்குனி மாதம் 2020ம் ஆண்டு அன்று கொண்டாடினார். அத் தினத்தை நியம வடிவில் தருக?

17. வெற்றுக்கூட்டை நிரப்புக.

$\square - 4929 = 8299$

18. 0 இற்கும் 20 இற்கும் இடைப்பட்ட எல்லா முதன்மை எண்களையும் எழுதுக.

19. வெற்றுக்கூட்டை நிரப்புக

(i) $1m = \square\ cm$


(ii) $1cm = \square\ m$

20. மாணவன் ஒருவன் தனது இரு கைகளையும் இரு பக்கமாக நீட்டியவாறு சூரியன் உதிக்கும் திசையை நோக்கி நடக்கும் போது அவனது இடது கை எத்திசையை நோக்கிக் காணப்படும்

பகுதி – II

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01) கீழே உள்ள எண்கோட்டில் A,B,P,Q,R மற்றும் D என்ற ஆங்கில எழுத்துக்களால் இலக்கங்கள் காட்டப்பட்டுள்ளன



1. ஒவ்வொரு எழுத்தினாலும் காட்டப்படும் எண்களை எழுதுக

A	.....	P	.....	R	.....
B	.....	Q	.....	D	.....

www.lkedu.lk


2. $G = A + P$ எனின், G இன் பெறுமானம் யாது?

3. $C > D$ ஆகவும் $R > C$ ஆகவும் இருக்குமாறு C இற்குப் பொருத்தமான எண்களை எழுதுக.

4. மேலே தரப்பட்டுள்ள எண்கோட்டின் படி $Q >$ ☐ ஆகுமாறு, வெற்றுக்கூட்டில் வரக்கூடிய பொருத்தமான எண்களைக் குறிப்பிடுக.

02)

a.



உருவில் ஒவ்வொரு இலக்கங்களினாலும் காட்டப்படும் கோண வகைகளை எழுதுக.

1 ..... 3 .....

2 ..... 4 .....

b.

வைத்தியசாலை	**சந்தை**	**வயல்**
தபால்கந்தோர்	**குளம்**	**கோயில்**
பாடசாலை	**காவல்நிலையம்**	**வீடு**

(i) குளத்திலிருந்து வடமேற்குத் திசையில் என்ன அமைந்துள்ளது?

(ii) வயலில் இருந்து தென்கிழக்குத் திசையில் அமைந்துள்ளவை யாவை?

(iii) கோயில் சார்பாகக் குளம் எத்திசையில் அமைந்துள்ளது?

03)

a) இடைவெளி நிரப்புக

i) 138 செக்கன்கள் = ... நிமிடங்கள்..... செக்கன்கள்

ii) 241 செக்கன்கள் =..... நிமிடங்கள் ..... செக்கன்கள்

b) A, B, C ஆகிய விளையாட்டு வீரர்கள் $1000m$ தூரம் ஓடி முடிப்பதற்கு எடுத்த நேரங்கள் முறையே 5 நிமிடங்கள் 2 செக்கன்கள், 4 நிமிடங்கள் 34 செக்கன்கள், 5 நிமிடங்கள் ஆகும்.

i) போட்டியாளர்கள் A, B, C என்போர் பெற்ற இடங்களைக் குறிப்பிடுக

ii) 1ம் இடம், 3ம் இடம் பெற்றவர்களின் ஓட்ட நேரங்களுக்கிடையிலான வித்தியாசம் யாதாகும்

www.lkedu.lk

c)

(i) கூட்டுக.

மணி	நிமிடம்	செக்கன்
2	48	29
+ 1	46	49

(ii) கழிக்குக.

மணி	நிமிடம்
3	07
– 1	39

04)

a) கணிதச் செய்கைக்குறியீடுகளைப் பொருத்தமான வகையில் வெற்றுக் கூடுகளில் இட்டு நிரப்புக

$7 \square (7 \square 7) \square 7 = 5$

b) வெற்றுக் கூடுகளை பொருத்தமான இலக்கங்களைப் பயன்படுத்தி நிரப்புக

(i)

	8	□	8	8
	4	3	7	□
+	3	3	□	4
1	5	9	8	1

(ii)

	4	3	5	□
–	1	9	□	5
	□	□	0	6

c) 596×96 இன் பெறுமானம் காண்க.

05)

a)

i) நாளாந்த வாழ்க்கையில் "மதிப்பிடல்" (Estimation) பயன்படும் இரு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

ii) ஒரு முழுஎண்ணைக் கிட்டிய 10 இன் மடங்கிற்கு மட்டந்தட்டிய போது 60 பெறப்பட்டது. அவ்வெண்ணாக இருக்கக் கூடிய எல்லா எண்களையும் எழுதுக.

b)

i) $(7 \times 1) + (7 \times 10) + (9 \times 100) + (0 \times 1000) + (6 \times 10000)$ என்றவாறு விபரிக்கப்படும் எண்ணை நியம வடிவில் எழுதுக.

ii) அவ்வெண்ணை வாசிக்கும் முறையைக் குறிப்பிடுக

iii) அவ்வெண்ணின் 100 மடங்கான எண்ணை நியம வடிவில் எழுதுக

www.lkedu.lk